மெட்ராஸ் பேப்பர்

# நீலப் பல் மகாராஜா



ஜெர்மனிக்கு வடக்கே, நார்வேக்குத் தெற்கே இருக்கும் ஒரு சிறிய நாடு, டென்மார்க். இங்கே, பத்தாம் நூற்றாண்டில் ஆட்சியில் இருந்த மன்னர் ஒருவரின் பெயர், ஹரால்ட் புளூடூத். இவர் அருகில் இருக்கும் தீவுகளுக்குச் செல்ல வசதியாகப் பல பாலங்களை அமைத்தார். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்காதீர்கள். இன்று நாம் பாடல் கேட்கப் பயன்படுத்தும் இயர்போன்களை நம் செல்பேசியோடு இணைக்கும் புளூடூத் தொழில் நுட்பத்தின் பெயர் இந்த மன்னரின் நினைவாக வைக்கப்பட்டதுதான். வைத்தவர் ஓர் இன்டெல் நிறுவன ஆய்வாளர். நம் ஊரில் மரம் நட்ட அசோகரை நினைவுகூர்வதில்லையா? அந்த மாதிரி அவர் பாலம் கட்டிய பரதேச மன்னரை நினைவுகூர்ந்து அவர் பெயரை வைத்திருக்கிறார்.

## புளூடூத் தரநிலை

புளூடூத் என்பது கம்பி இல்லாமல், ரேடியோ அலை வரிசையின் மூலமாக மிகக் குறைந்த சக்தியில் அருகில் இருக்கும் மின்-சாதனங்களை ஒன்றோடு ஒன்று இணைக்கும் ஒரு தர நிலை

*(ஸ்டாண்டர்ட்). ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படும் ஐந்நூற்றுப் பத்து (510) கோடிக்கும் மேலான மின்னணுக் கருவிகளில் இந்த புளூடூத் நுட்பம் இருக்கிறது.*

***ஐபோன்-7 என்கிற வில்லன்***

*2016ஆம் ஆண்டுவரை செல்பேசியில் பாட்டுக் கேட்பது எளிதாக இருந்தது. நூறு ரூபாய்க்கு இயர்போன் வாங்கி, அதன் வயரின் (கம்பி) முனையில் இருக்கும் பின்னை எடுத்து செல்பேசியின் பொருத்துக் குழியில் (போர்ட்) சொருகினால் வேலை முடிந்தது. சொகுசாகப் பாட்டுக் கேட்டுக்கொண்டே என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.*

*விடுவார்களா புண்ணியவான்கள்? அந்த ஆண்டு ஆப்பிள் நிறுவனம் ஐபோன்-7ஐ வெளியிட்டது. ஆனால் அந்த போனில் இயர் போனுக்கான போர்ட் இல்லை. அகற்றிவிட்டார்கள்.*

*அவ்வளவு தான். அதன் பிறகு வந்த அனைத்து செல்பேசிகளிலும் புளூடூத் மூலமாக மட்டும்தான் இயர்போனை இணைக்க முடியும் என்றாகிவிட்டது. பல நிறுவனங்கள் இதற்கு வினோதமாக ஒரு காரணம் சொல்லின. நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் செல்பேசிகளை இளைக்க வைத்துக் கொண்டே இருக்கிறோம். ஒல்லியாக, இலியானா, பூஜா ஹெக்டே போல ஆக்கிக்கொண்டிருக்கிறோம். அதனால் இயர்போன் பொருத்துக் குழிக்கு இடமில்லை. இயர்போனைக் காதுக்குள் மாட்டிக் கொண்டு ஓடும்போது, வெளியில் தொங்கும் கம்பி துணியில் மாட்டிக் கொள்கிறது. மேலும் செல்பேசியில் இதற்காகக் குழி வைத்தால் அதன் மூலம் தண்ணீர் உள்ளே செல்வதையும் தடுக்க முடிவதில்லை. இதனால் இனி இயர்போன் போர்ட் கிடையாது. ப்ளூ டூத் ஒன்றுதான் வழி.*

*இந்தக் காரணங்களில் நியாயமிருந்தாலும் உண்மையான காரணம், கம்பி இயர்போனைவிட புளூடூத் இயர்போன்களின் விலை அதிகம் என்பதுதான். அதனால் நிறுவனங்களுக்கு வருவாய் அதிகம்.*

*ஒரு கம்பி இயர்போனை வாங்கினால் சில ஆண்டுகள் பயன்படுத்தலாம். அப்படியே அவை பழுதானாலும் அவற்றைச் சரி செய்வதும் சுலபம். அருகில் இருக்கும் ஆல்-இன்-ஆல் அழகு ராஜாக்களே நொடியில் சரி செய்துவிடுவர். ஆனால் புளூடூத் இயர்போன்களின் கதையே வேறு.*

*அளவில் சிறியவை என்பதால் அவற்றின் உள் கட்டமைப்பு மிக நுட்பமானவை. பல சிலிக்கான் சில்லுகள் உள்ளுக்குள் இருக்கும். சிறந்த பொறியாளர்களால்தான் அவற்றின் வடிவமைப்பைப் புரிந்து கொள்ள முடியும்.*

*மேலும் அவற்றினுள் பேட்டரிகள் இருப்பதால் அவை சீக்கிரமே வற்றிப் போகும். இதனாலெல்லாம் நீங்கள் வாங்கும் புளூடூத் இயர்போன்களை இரண்டொரு ஆண்டுக்கு மேல் வைத்துக் கொள்ள முடியாது. புதுசு வாங்க வேண்டும். தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மேலும் மேலும் வியாபாரம்.*

*ஆப்பிள் நிறுவனத்தின் ஏர்-பாடை பற்றி இங்கே விட்டுவிடலாம். அவற்றின் ஆரம்ப விலையே பதினான்காயிரம் ரூபாய். அவர்களின் மேல்தட்டு வடிவமான ஏர்-பாட்ஸ் மாக்ஸ் ரூபாய் அறுபத்தி-ஆறாயிரம். சொக்கா, அது நமக்கில்லை.*

**போர்கள் ஓய்வதில்லை**

*நிற்க. இவ்வளவு விரிவாக இதனைச் சொல்ல ஒரு காரணம் உண்டு. இந்த புளூடூத் இயர்போன்களுக்கும் எனக்கும் பல வருடங்களாகக் கடும் போர் நடந்துகொண்டிருக்கிறது. அதைக் குறித்துச் சிறிது சொல்ல வேண்டும்.*

*கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் மட்டும், நான் வாங்கிய புளூடூத் இயர்போன்களின் எண்ணிக்கை பதிமூன்றுக்கும் மேல் இருக்கும். சுமாராக ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு வாங்கியிருக்கிறேன். குறிப்பாக வீட்டிலேயே முடங்கியிருந்த இரண்டாயிரத்து இருபது, இருபத்தி ஒன்றில் மட்டுமே நான் வாங்கியவை ஆறுக்கும் அதிகம். ஏன் இவ்வளவு? என்ன சொதப்பல்? நீங்கள் வாங்கும் போது பார்க்க வேண்டியது என்னென்ன? பார்க்கலாம்.*

*2017 இல் நான் வாங்கியது ஒரு சோனி தயாரிப்பு. கழுத்தின் பின்புறம் ஒரு கயிறு வந்து (மாலை மாதிரி) இரண்டு காது மடல்களின் மேல் மாட்டிக் கொள்ளும் இயர்போன். விலை இரண்டாயிரத்து சொச்சம். இதில் ஒலி தெளிவாகக் கேட்டது; ஆனால் பேட்டரி நிற்கவில்லை. இதை மாட்டிக் கொண்டு சாலையில் நடந்துகொண்டே பேசினால், அந்த முனையில் இருப்பவருக்கு நாம் பேசுவதைவிட நம்மைச் சுற்றியுள்ள இரைச்சல்தான் அதிகமாகக் கேட்டது.*

*இப்படியிருக்க, ஒரு நாள் ஆட்டோவில் போகும் போது ஓட்டுநர் தம்பி யாரோடோ (காதலியாக இருக்கலாம்) இயர்போனில் பேசிக் கொண்டே வந்தான். பேசுவது பின்னால் இருக்கும் எனக்கே சரியாகக் கேட்கவில்லை. அவ்வளவு சத்தம்.*

*இறங்கும் போது கேட்டேன், இந்த இரைச்சலில் எப்படிப் பேசமுடிகிறது? என்ன இயர்போன் வைத்திருக்கிறாய்? விலையுயர்ந்த சரக்கா?*

*அதெல்லாம் இல்லை சார். சைனீஸ் மேக். ரிச்சி தெருவில் வாங்கினேன்; எழுநூறு ரூபாய்தான் என்றான்.*

*கடுப்பாகிப் போனேன். சோனியெல்லாம் நம்மூருக்குச் சரி வராது என்று முடிவு செய்து, வீட்டுக்கு வந்தவுடன் சீனாவின் அலி-எக்ஸ்பிரஸ் தளத்தில் ஒரு காதில் மட்டும், காது மடலின் மேல் வளையல் போல மாட்டி, மீசை வரை நீண்டு வரும் ஒரு இயர்போனை ரூபாய் ஆயிரத்திற்கு வாங்கினேன்.*



முதல் மாதம் நன்றாக வேலை செய்தது. அழைப்பவருக்கும் நான் பேசுவது ஓரளவு தெளிவாகக் கேட்டது. அடுத்த மாதத்திலிருந்து செல்பேசிக்கும் இயர்போனுக்கும் அடிக்கடி பேச்சு வார்த்தை விட்டுப் போனது. எல்லாவற்றையும் அழித்து மீண்டும் இணைத்தால் ஒரு சில நாள் வேலை செய்யும். மீண்டும் நின்று போகும். மின்னணு துறையில் இருக்கும் நண்பரைக் கேட்டேன். விலை கம்மி சைனீஸ் தயாரிப்பு என்றால் அப்படித் தான் என்று வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினார்.

முன் வைத்த காலைப் பின் வைப்பது, தமிழர் பண்பாடு இல்லையென்பதால் ஒரு நல்ல இயர்போன் வாங்கியே தீருவது என்று தொடர்ந்தேன். இணையத்தில் பல நூறு கருத்துகளைப் படித்து புளூடூத் இயர்போன்களில் புகழ் பெற்றது ஜாப்ரா நிறுவனத்தின் படைப்புகள் என்று தெரிந்து கொண்டேன். அவர்களின் டாக் என்னும் பதிப்பை ரூபாய் எட்டாயிரம் கொடுத்து வாங்கினேன்.

மிக லேசாகவும், மிக மிகச் சிறிய அளவிலும் இருந்தது, இந்த ஜாப்ரா டாக். இதில் பேச்சுத் தரம் ஓரளவு பரவாயில்லை. ஆனால் பாடல்கள் தகர டப்பாவிலிருந்து வருவது போல இருந்தது. சின்னஞ் சிறிய பேட்டரி என்பதால் இரண்டு மணி நேரம் பேசினால் அணைந்து போகும். இதோடு நான் விட்டுவிடவில்லை. விக்கிரமாதித்தன் பாணியில் தொடர்ந்தேன்.

*அடுத்ததாக, ஜாப்ரா நிறுவனத்தின் விலையுயர்ந்த எலைட் பதிப்பை வாங்கினேன். இதன் விலை டாக்கைவிட இரண்டு மடங்கு. ஆப்பிள் நிறுவனத்தின் ஏர்-பாட் போல இருக்கும் இந்த எலைட், இரண்டு காதுகளுக்குத் தனித் தனியான காதணிகளைக் கொண்டது. ஒரு வயதில் காது குத்தியிருப்பார்கள். அப்போது கடுக்கன் மாட்டாத குறையை இப்போது தீர்த்துக்கொண்டேன்.*

*மேற்படி காதணிகளைச் சேமித்து வைக்க மற்றும் சார்ஜ் செய்ய மோதிரப் பெட்டி போன்ற ஒரு சிறிய டப்பாவும் உடன் வந்ததது. இதில் பாடல்களின் தரம் நன்றாக இருந்தது. (டப்பாவில் அல்ல. உள்ளே இருந்த சரக்கில்தான்.) பேசும் போது இரைச்சலை நீக்கும் நாய்ஸ்-கான்செலேஷன் என்னும் வசதி சுமார் தான். இருந்தாலும் பேட்டரி அரை நாளுக்கு மேலாக வந்தது.*

*ஒரு முறை டெல்லி சென்றிருந்தபோது, டெல்லி மெட்ரோவில் கை தவறி ஒரு காதணியைத் தொலைத்துவிட்டேன். விமானத்தில் திரும்பும் போது சார்ஜ்-பெட்டியை விமானத்தில் முன் சீட் நாற்காலியின் பையில் வைத்து மறந்து இறங்கி வந்துவிட்டேன். நிலையத்திற்கு வந்தவுடன் நினைவு வரப் போய் கேட்டதற்கு, அங்கே இருந்த பணிப்பெண் சிரித்தே விட்டார். அவனவன் பெண்டாட்டியையே விமானத்தில் விட்டு வந்து தேடுகிறான். கேவலம் ஒரு இயர்போன் சார்ஜர் டப்பவை உங்களுக்காகத் தேடிக் கொடுக்கணுமா என்பது போல ஒரு பார்வை பார்த்து, விமானம் அடுத்த ஊருக்குக் கிளம்பிப் போயாச்சு என்றாள். நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.*

*லாக்-டவுனில் வேறு எதுவும் கிடைக்காததால் இந்தியாவில் தயாரித்த பீட்டெல் நிறுவனத்தின் நெக்-பாண்டு என்ற கழுத்தைச் சுற்றி கயிறு வந்து இரண்டு காது மடல்களின் மேல் மாட்டிக் கொள்ளும் இயர்போன் (முதலில் வாங்கிய சோனியைப் போன்ற மாடல்) வாங்கினேன். ஆயிரத்து சொச்சம் தான். என்ன காரணம் என்று தெரியவில்லை. இதுவரை வாங்கியதிலேயே இது தான் சிறப்பாக வேலை செய்தது. கடந்த ஆண்டு ஹாங்காங்கில் இருந்து வரும் அங்கர் என்கிற நிறுவனத்தின் சவுண்ட்-கோர் என்கிற இயர்போன்களை வாங்கினேன். அதுவும் நன்றாக உள்ளது. இப்போது நாயிஸ், போட், ஜெப்ட்ரோனிக்ஸ் போன்ற நிறுவனங்களின் படைப்புகளும் நன்றாக உள்ளதாகக் கேள்வி.*

*என் அனுபவத்தில் நான் தெரிந்து கொண்டது இதுதான். செல்பேசி வாங்குவதை விடக் கடினமானது புளூடூத் இயர்போனைத் தேர்வு செய்வது. வாங்கும் முன் நமக்கு என்ன தேவை, எவ்வளவு செலவு செய்ய முடியும் என்று யோசித்து, தற்போது கிடைக்கும் மாடல்களை இணையத்தில் ஆராய்ந்து பின்னர் வாங்க வேண்டும். பெரிய நிறுவனத்தின் தயாரிப்பு என்பதால், விலையுயர்ந்தது என்பதால் அது நம் சூழ்நிலைக்கும் நன்றாக வேலை செய்யும் என்பது அவசியமில்லை.*

*இயர்போன் காதணிகளின் அளவு ஓரளவுக்கு மேல் குறையக் குறைய அதில் வரும் பாடல்களின் தரம் குறையும். பேட்டரியும் குறைவாக இருக்கும். அதைக் கவனிக்கவும். கழுத்தைச் சுற்றி மாலை*

போல மாட்டிக் கொள்ளும் மாடல்கள் பார்க்க இடைஞ்சலாக இருந்தாலும் மற்றதைவிட எவ்வளவோ பரவாயில்லை. விலையும் குறைவு; தொலைந்து போவதும் அரிது.

**ஹெட்செட்**

காதொலிக் கருவிகளில் அளவில் பெரியதாக, எடையும் அதிகம் இருக்கும் – காது மடல்களின் வெளியே (பாட்டில் முடியைப் போல) மாட்டிக் கொள்ளும் வகைக்கு ஹெட்செட் என்று பெயர். இந்த வகையிலும் புளூடூத் வசதி உண்டு. இவற்றில் பெரிய அளவு ஒலி பெருக்கிகள் இருக்கும். பாடல்கள் நன்றாகக் கேட்கும். நம் காதின் உறுப்புகளுக்கும் அழற்சி குறைவு. பேட்டரி இரண்டு நாட்கள் வரும். உங்களுக்குப் பிடித்திருந்தால் இவற்றை நீங்கள் தேர்வு செய்யலாம். நீங்கள் கேட்பவை உங்களை ஒட்டியிருப்பவருக்கு ஓரளவு கேட்கும், ரகசியம் வேண்டாம்.

**புளூடூத் 5.3**

இறுதியாகப் பார்க்க வேண்டியது, நீங்கள் வாங்கும் இயர்போன் இப்போது புளூடூத் 5.3 என்கிற புதிய தரநிலையில் வேலை செய்யுமா என்பது. இது இருந்தால் செல்பேசிக்கும் இயர்போனுக்கும் இணைப்பு அடிக்கடி துண்டிக்கப்படாது.

பின்குறிப்பு: மன்னர் ஹரால்ட் புளூடூத்தான் டென்மார்க் நாட்டுக்கு கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்தார் எனக் கூறப்படுகிறது. அஃப்கோர்ஸ், இதற்கும் இயர்போனுக்கும்கூடத் தொடர்பில்லை.

திரு.ந.ச. வெங்கடரங்கன்

venkatarangan@gmail.com